பதிவு எண் : ஈ. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 28உ (14—11—67) செவ்வாய் வெளியூர் : ஐப்பசி 29உ (15—11—67) புதன் [இதழ் : 126

எதிர்க் கட்சியா-- எதிரிக் கட்சியா?

சாதனை கேட்போரின் சாதனைதான் என்ன-- இருபதாண்டு ஆண்ட இலட்சணம் தெரியாதா?

காங்கிரசாருக்கு அமைச்சர் மா. முத்துசாமி இடித்துரை

சென்னை, நவ. 13—

"நல்ல எதிர்க் கட்சி இல்லையென்று சொல்லிவந்த காங்கிரசுக் கட்சியையே சென்ற தேர்தலில் மக்கள் எதிர்க் கட்சியாக ஆக்கினார்கள்!

"எதிர்க் கட்சியாக ஆகியிருக்கும் காங்கிரசுக் கட்சி, கடந்த எட்டு மாத காலத்தில் கொடுத்த திட்டங்கள் என்ன? இருபது ஆண்டுக்காலம் ஆண்ட கட்சியாயிற்றே—இவர்கள் ஏன் திட்டங்களைக் கூறவில்லை?

"இவர்கள், 'எதிர்க் கட்சியாக இயங்கவில்லை—'எதிரி'க் கட்சியாகத்தான் இயங்குகிறார்கள்!

"ஏழை சிரிக்க வேண்டும்--அதுதான் எங்கள் இலட்சியம்! அந்த இலட்சியத்துக்காகத்தான் அண்ணா அவர்கள், ஆட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்! அந்த இலட்சியம் நிறைவேற நாங்கள் முனைந்து முயன்றே தீருவோம்! எந்த நிலையிலும் இந்த இலட்சியத்திலிருந்து நாங்கள் பின்வாங்கமாட்டோம்!"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துச்சாமி' வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் நடந்த கூட்டத்தில், காங்கிரசாரின் கீழ்த்தரப் போக்கைக் கண்டித்துப் பேசுகையில் விளக்கினார்.

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதித் தேர்தலில் வெற்றி பெற்ற 'முரசொலி' மாறன், மேல் சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற க. அறிவழகன் ஆகியோரைப் பாராட்டி நடத்தப்பட்ட இக்கூட்டம், தோழர் கே. முத்து தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி, 3-வது வட்டச் செயலாளர் க. சாரங்கபாணி ஆகியோர், 'சட்டம்—அமைதி நாட்டில் சீர்குலைந்துவிட்டது' என்று, பொய்ப் பிரச்சாரம் செய்துவரும் காங்கிரசாரின் போக்கினைக் கண்டித்தும், கழக அரசின் சாதனைகளை விளக்கியும் பேசினர்.

உலக வரலாற்றில் இப்படி நடந்தது உண்டா?

'அமைச்சர் மா. முத்துசாமி தொடர்ந்து பேசியதாவது :—

நடந்து முடிந்த பொதுத்தேர்தல் முடிவு சனநாயகத்துக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். 20 ஆண்டுக்காலம் நடந்த ஒரே கட்சி ஆட்சியை மக்கள் மாற்றி அமைத்தார்கள்; தி. மு. க. ஆட்சியை ஏற்படுத்திவிட்டார்கள்.

ஆட்சிப் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்ததால், தென் சென்னை இடைத் தேர்தல் நடத்தவேண்டி வந்தது. இடைத் தேர்தலைப் பற்றி குறிப்பிட்ட அண்ணா அவர்கள், 'காங்கிரசுக்காரர்கள் ஒத்துவருவார்களானால்—வடக்கே இருப்பவர்கள் தமிழ்நாட்டுக்கு உரிய இடத்தை அளிப்பதாக உறுதியளித்தால்—தென் சென்னைத் தொகுதியைக காங்கிரசுக்குத் தி. மு. கழகம் விட்டுக் கொடுக்கும்' எனக் கூறினார்கள்.

உலக வரலாற்றில், எத்தனையோ அரசியல் தலைவர்களைப் பற்றி படித்திருக்கிறோம்; ஆனால், ஓர் எதிர்க் கட்சிக்கு இப்படி வலிய வந்து இடம்தர முயன்ற தலைவரைப் பார்த்ததில்லை!

இப்படி அந்தத் தொகுதியைக் காங்கிரசுக்கு விட்டுக் கொடுப்பது, 'காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு ஓர் அனுதாபமாக இருக்கட்டும்' என்று அண்ணா அவர்கள் பெருந்தன்மையாகக் கூறினார்கள்.

'காங்கிரசுக் கட்சி இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட கட்சி; சனநாயகத்திற்காகப் பாடுபட்ட கட்சி' என்ற முறையில்தான் அண்ணா அவர்கள் விட்டுக்கொடுக்க முன்வந்தாரேயன்றி, அவர்களைக் கேலி செய்வதற்காக அல்ல!

ஆனால், காங்கிரசுக்குப் பெருந்தன்மையுமில்லை—பெருந்தன்மையாக நடந்துகொள்ளத் தெரியவுமில்லை! அண்ணா அவர்கள் கூறியதை ஏற்றுக்கொள்ளவில்லை! அதன் பின்னர்தான் அண்ணா அவர்கள், 'தி. மு கழகமே, அதிகாரபூர்வமாகப் போட்டியிடும்' என்று அறிவித்தார்கள்.

மேடைக்கு மேடை இப்படியா பேசுவது?

தேர்தல் பிரச்சாரம் செய்யவந்த காமராசர், ஆட்சிப்பொறுப்பை ஏற்று எட்டு மாதங்களே ஆகியிருந்த நம்மைப் பார்த்து, 'எந்தச் சாதனையையும் இவர்கள் செய்யவில்லை; இவர்களெல்லாம் வெறும் வெற்று வேட்டுகள்; இவர்களால் நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை; மக்கள் இப்போது புரிந்துகொண்டார்கள்; அதன் முடிவு இப்போது தெரியப் போகிறது' என்று மேடைக்கு மேடை முழங்கினர்!

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், 'மக்கள் போதையில் ஓட்டுப் போட்டுவிட்டார்கள்; நம்பி ஏமாந்து விட்டார்கள்; இப்போது நல்ல தீர்ப்பு அளிக்கப் போகிறார்கள்' என்றார்!

நிலிக்கண்ணீர் வடித்தனர்— நிலைமை என்னவாயிற்று?

தேர்தல் பிரச்சாரம் செய்யவந்த ஒரு பெரிய அரசியல் பாரம்பரி

(4-ம் பககம் பார்க்க)

காதில் விழுந்தது!

"போலீசு நிலையங்கள் அமைவது பற்றியோ புதிய கட்டுப்பாடுகள் பிறப்பது பற்றியோ நல்லவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"தேவையில்லை."

"தமிழக அரசாங்கத்தின் தலைமை அலுவலக ஊழியர்களுக்குப் புகைப் படத்துடன் கூடிய அனுமதிச் சீட்டு வழங்குவது குறித்து காங்கிரசுப் பத்திரிகை ஏன் புலம்புகிறது?"

"ஒருவேளை, கட்டுப்பாடுகள், காங்கிரசுக்காரர்களுக்குப் பாதகமாகஇருக்கிறதோ என்னவோ?"

நவம்பர் 14!

★

ஒருவகையில் பார்க்கப் போனால், காங்கிரசுக்காரர்களுக்கு இன்றுதான் நேருவின் முதல் பிறந்த நாள்!

1967-க்குப் பின் வந்துள்ள முதல் நவம்பர் 14—இது!

இந்தியாவின் பாதி மாநிலங்களுக்கு மேல் எதிர்க் கட்சியாக ஆகியிருக்கும் காங்கிரசுக்கு, 'இன்று நம்மை வழிநடத்திச் செல்ல நேரு இருந்திருந்தால்...?'' என்ற ஒரே சிந்தனைதான் உயர்ந்த சிந்தனையாக இருக்க முடியும்!

இந்தியா முழுமையிலும் காங்கிரசு ஆளும் கட்சியாக மட்டுமே இருந்தபோது நிர்வாகத்துக்குத் தலைமை தாங்கிய நேரு, காங்கிரசு ஓர் எதிர்க் கட்சியாகவும் ஆகியிருக்கும் இன்றைய நிலையில், அவர் அதற்குத் தலைமை தாங்கியிருப்பாரானால் 'இந்திய அரசியல் எப்படியிருக்கும்' என்ற எண்ணம்—அவரது பிறந்த நாளான இன்று—அனைவருடைய நெஞ்சங்களிலும் எழாமல் போகாது!

'நேரு எங்களுக்கே சொந்தம்' என்று 'உரிமை' கொண்டாடும் அளவுக்குக் காங்கிரசுக்காரர்கள் 'மத்திய ஆட்சியில் நாம்தான் இருக்கிறோம்; அவர் விட்டுச் சென்ற பல பொறுப்புக்கள், நம்மால்தான் முடிக்கப்பட இருக்கின்றன' என்ற கடமை உணர்வினைக் கொள்வதில்லை!

அவர், பாதியில் விட்டுச் சென்ற மொழிப் பிரச்சினை—அந்நிய ஆக்கிரமிப்பு—ஆகிய இரண்டும், 'இந்தியாவின் முதல் பெரும் முடிவடையாத விவகாரங்கள்' என்பதனை, அவரது பிறந்த நாளான இன்று காங்கிரசுக்காரர்கள் கருத்தில் கொண்டால்தான், 'அவரது கட்சிக்காரர்கள்' என்ற உரிமையை அவர்கள் சொல்லிக்கொள்வதற்கு இயலும்!

மாநிலங்களில் வேற்றுக் கட்சிகள் ஆட்சிக்கு வந்துவிட்ட நிலைமைதான், காங்கிரசுக்காரர்களின் சிந்தனை–செயல் இரண்டினையும் இன்று ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன!

நேரு பிறந்த நாளினைக் கூட இன்று தமிழகத்துக் காங்கிரசுக்காரர்கள் அந்த உணர்வுடன்தான் கொண்டாடுகின்றனர்!

'காலம் மாறும்' என்ற இயற்கையின் நியதியைப் பிரதிபலிப்பதுதான் குழந்தைகள் சமுதாயம்!

மழலைகளை விரும்பாதவர் எவரும் கிடையாது; ஆனால் நேரு, அவர்கள்பால் அதிகம் கவரப்பட்டார்!

'எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் என்ன செய்கிறோம்' என்ற ஒரு கணக்கெடுப்பு நாளாக இருக்கட்டும்—என்ற எண்ணத்தில்தான் நவம்பர் 14-ம் நாளை—'குழந்தைகள் நாள்' ஆகக் கொண்டாடப்படுவதனை—தாம் இருக்கும்போதே நேரு அனுமதித்தார்!

கட்சி வேறுபாடுகளைக் கடந்து பொது சிந்தனைகளுக்குப் பயன்படும் ஒரு நாளாக நவம்பர் 14 இருப்பதுதான், நேருவுக்குக் காட்டும் உண்மையான மரியாதையாக இருக்க முடியும்!

—எஸ். ஆர்.

'எங்களைக் கவிழ்க்கச் சூழ்ச்சியா?'

'இரத்த ஆறுதான் இங்கு ஓடும்'

மத்திய அரசுக்கு மேற்கு வங்க முதலமைச்சரின் கடும் எச்சரிக்கை!

"கல்கத்தாவுக்கும்—புதுடில்லிக்கும் இடையே உள்ள கசப்பு நிலைமைகள் மேலும் சூடுபிடித்துவிட்டதோ'' என ஐயுறத்தக்க அளவில், மேற்கு வங்கத்தின் தலைநகரில் நடைபெற்றிருக்கும் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய மாநில அமைச்சர்கள் அனைவரும், மத்திய அரசுக்குக் கடும் எச்சரிக்கை தந்திருக்கின்றனர்!

"மேற்கு வங்கத்தின் கூட்டணி அரசை, இடையில் 'கவிழ்த்துவிடப்' புதுடில்லி மறைமுகமாகச் சூழ்ச்சி வேலைகளில் இறங்கியிருக்கிறது'' என அவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

"வங்க மக்கள், மத்திய அரசின் இந்தப் போக்கினை அனுமதிக்கமாட்டார்கள்; தங்கள் இரத்தத்தைக் கொட்டியேனும் புதுடில்லியின் சூழ்ச்சி வேலைகளைத் தடுத்தே தீருவார்கள்'' என்று, உணர்ச்சிப் பெருக்குடன் பேசியிருக்கிறார் அஜாய் முகர்ஜி!

வர்த்தக அமைச்சர், நீர்ப்பாசன அமைச்சர் ஆகிய மற்றையோரும், 'மேற்கு வங்க அமைச்சரவைக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது; கூட்டணிக் கட்சிகளின் ஆதரவும் நீடிக்கிறது; எனவே, தவறான தகவல்களின் பேரில் மத்திய அரசு தலையிட வேண்டாம்' என்று எச்சரித்துப் பேசியிருக்கிறார்கள்.'

நவ. 23 முதல்......

இனிப்புக்குச் சுதந்தரம்!

சர்க்கரைக் கட்டுப்பாடு-ஒரு பகுதி தளருகிறது

நவ. 23-ம் நாள்முதல், மாநிலத்தில் உற்பத்தியாகும் 40 சதவிகித சர்க்கரை, கட்டுப்பாடு இல்லாமல் வெளிச் சந்தைகளில் விற்கப்படுமெனத் தெரிகிறது.

உற்பத்தியாளர்கள், அறுபது சதவிகித அளவினை மட்டும் கட்டுப்பாட்டுப் பங்கீட்டுக்காக ஒப்படைத்துவிட்டு, மிகுதியைத் தங்கள் விருப்பம்போல் விற்கும் முறை, 23-ந் தேதிமுதல் அமுலுக்கு வர இருக்கிறது.

பெரும் அளவு வாங்குபவர்கள், உற்பத்தியாளர்கள் மூலம் வினியோகிக்கப்படும். 40 சதவிகித அளவினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

'தாய் மொழியுடன் ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும்'

பிறமொழியை விரும்பிப்படிக்க எவ்விதத் தடையும் இல்லை!

தமிழக அரசின் கல்விக் கொள்கை பற்றி அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

"தமிழக மக்கள் தாம் அறிந்துகொள்ள வேண்டியவை—புரிந்துகொள்ள வேண்டியவை அனைத்தையும் தங்கள் தாய்மொழியான தமிழிலேயே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்; 'அப்படி எதிர்பார்ப்பது தவறு' என்று எவரும் கூறமாட்டார்கள்! அப்படித்தான் ஆங்கிலேய நாட்டிலுள்ள ஆங்கிலேயர்களும், ஜப்பான் நாட்டிலுள்ள ஜப்பானியர்களும், இரஷ்ய நாட்டிலுள்ள இரஷ்யர்களும், இத்தாலிய நாட்டிலுள்ள இத்தாலியர்களும் தத்தம் மொழியிலேயே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

"தமிழகத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்கள், தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பெறும் கல்வி அறிவு தமிழின் மூலமே கிடைக்கப்பெற வேண்டும் என்றும், தங்களின் பண்டமாற்று—நீதிமன்றம்—சட்டமன்றம்—ஆட்சித்துறை—அலுவலகம் ஆகிய அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்! இந்த ஆவலை நிறைவேற்றுவது இன்றைய—வருங்காலக் கல்வியாளர்களின் நீங்காக் கடமையாகும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனர் நாள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

சாஸ்திரி நகரில் இந்த விழா நடைபெற்றது; ஏராளமான ஆசிரியர்களும் மாணவர்களும், மற்றும் கல்வித்துறை நிபுணர்களும, விழாவில் கலந்துகொண்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய செட்டி நாட்டரசர் சர். அண்ணாமலை செட்டியாரின் நினைவு விழாவே இது!

துணைவேந்தர் திரு. பி. சந்திரா ரெட்டி தலைமைவகித்தார்.

அறிவுத் திறன்--ஆற்றல் திறன் இருக்குமானல்.....!

அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் பேசியதாவது:—

"சுமார் 65 கோடி மக்களைக் கொண்டு பரந்து காணப்படும் சீனவும் இருக்கிறது — சுமார் பத்து கோடி மக்களைக்கொண்டு சுருங்கிக் காணப்படும் ஜப்பானும் பக்கத்திலேயே இருக்கிறது; ஆனல், வளமான வாழ்விலும் வசதியிலும் சீனவை மிஞ்சிய நிலையில்தான் ஜப்பான் இருக்கிறது! இதற்குக் காரணம், பரப்பளவு மக்கட்தொகை ஆகியவற்றின் பெருக்கம் அல்ல; அறிவுத் திறன்—ஆற்றல் திறன் ஆகியவற்றின் பெருக்கமே ஆகும்.

ஒரு நாடு எந்த அளவுக்குத் தன்னுடைய அறிவுத் திறனையும—ஆற்றல் திறனையும் பயன்படுத்தி எல்லாவகையிலும், எல்லா வழியிலும் தன்னிறைவு பெற்று—இயன்ருல், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருவாய் பெற்று வாழ்கிறதோ, அந்த நாடுதான் சிறப்புற்றுத் திகழக் காண்கிறோம்."

மொழிப் பிரச்சினை

மொழிப் பிரச்சினையைப் பற்றி திரு. நெடுஞ்செழியன் குறிப்பிட்டதாவது:—

"நமது மாநில மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்வதற்குத் தமிழும், ஆங்கிலமும், போதுமானவை; எந்தத் தனிப்பட்ட மொழிக்கும் தனிச் சலுகை காட்டக்கூடாது. ஒவ்வொரு மாநிலமும், தனது வட்டார மொழியின் வளர்ச்சிக்கு உதவி புரியவேண்டும்.

அத்துடன், மாநிலங்களிடையே தொடர்பு இருக்கவும், உயர்தரப் படிப்புக்கும் இன்றியமையாத ஆங்கிலத்தைச் சரிவரப் படிப்பதற்கு வழிசெய்ய வேண்டும்.

நன்கொடை அவசியம்

இந்தியா போன்ற பெரிய நாடுகளில் கல்வி முன்னேற்றத்திற்கு அரசின் முயற்சி மட்டும் போதாது; பணவசதி உள்ளவர்கள் தாராளமாக நன்கொடைகள் வழங்கவேண்டும்.

கல்வி நிலைமை

"இன்றைய நிலையில் அதாவது 1967—68-ஆம் ஆண்டில் தமிழக அரசு, கல்வித் துறைக்கு மட்டும் ரூ. 54 கோடி ஒதுக்கியிருக்கிறது.

ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றம் போன்ற உள்ளாட்சி மன்றங்கள் ரூ. 4 கோடிக்குமேல் செலவு செய்கின்றன.

இது தவிர, அறங்காப்பு நிலையங்கள் பலவும், அறம் புரியும் செல்வர்கள் பலரும் பல கோடி ரூபாய்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வளவு ஊக்கம் தந்தும், தமிழகம், கல்வியின் முழுப் பயனையும் பெற முடியவில்லை! கல்வியின் பயனைப் பெருதவர்கள் இன்னமும் பெருவாரியினராகவே இருந்து வருகின்றனர்! இன்னமும் தமிழகத்தில் நூற்றுக்கு 62 பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது!

ஆங்கிலத்தின் அவசியம்

உலகில் எந்த மூலையில்—எந்த முடுக்கில் என்ன நிகழ்ச்சி நடைபெற்ருலும் உடனே உலகுக்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமேயாகும்!

உலகில் எந்த நாட்டில்—எந்த அறிவியல் அறிஞர்—எந்தக் கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தாலும், அடுத்த நொடியிலேயே உலகத்திற்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமே ஆகும்!

உலகில் எந்த நாட்டில்—எந்த மொழியில் சிறந்த இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், கலையியல் நூல்கள் இருந்தாலும்—தோன்றினுலும் அவற்றையெல்லாம் உடனுக்குடன் மொழிபெயர்த்து உலக முழுமைக்கும் அறிவிக்கும் மொழி ஆங்கிலமே ஆகும்!

நம் தாய்மொழியான தமிழ், எல்லாத் துறையையும் பற்றிய அறிவையும் பெற்று அவற்றையெல்லாம் விளக்கிக் காட்டும் ஆற்றலோடு விளங்க வேண்டுமாயின், அதற்கு ஆங்கிலம்தான் உறுதுணை புரியக் கூடிய மொழியாகும்!

கல்வி முறை

தமிழகக் கல்வி முறையில் முதல் வகுப்பிலிருந்து தாய் மொழியும் வட்டார மொழியுமான தமிழையும், மூன்ருவது வகுப்பிலிருந்து உலகப் பொது மொழியும் தொடர்பு மொழியுமான ஆங்கிலத்தையும் ஒவ்வொருவரும் கட்டாயம் பயில வேண்டுமென்ற ஏற்பாடு வற்புறுத்தப்படடு வருகிறது.

தமிழ் மொழியில் சிறப்புப் பயிற்சி பெற விரும்புவோருக்கும், பிற மொழிப் பயிற்சி பெற விரும்புவோருக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு, 9, 10, 11-ம் வகுப்புகளில் சிறப்புத் தமிழையோ அல்லது கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, சம்ஸ்கிருதம், இந்தி போன்ற மொழிகளில் ஒன்றையோ விருப்பப் பாடமாகப் படிக்கலாம் என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் தமிழ் அல்லாத 13 மொழிகளுக்குத் தேவையான வாய்ப்பு உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறையில் தமிழ், ஆங்கிலம் இரண்டையும் கட்டாய மொழியாகவும், மூன்ருவது ஒரு மொழியை விருப்ப மொழியாகவும் பயிலுவதற்கேற்ற வகையில் மூன்று மொழிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ், ஆங்கிலம் இரண்டை மட்டுமே கற்றுக்கொள்ள விரும்புவோர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது.

கல்லூரிப் படிப்பில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இப்பொழுது இடம் பெற்றிருக்கின்றன.

கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழ் மொழியில் பாடப் பயிற்சியளிக்கும் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுருக்கிறது.

தமிழ் மாநிலத்தில் ஆங்கிலத்தின் இடத்தை எல்லா வகையிலும் பெற்றுக்கொள்ளும் முழு உரிமை தமிழ் மொழிக்குத்தான் உண்டே அல்லாமல் இந்தி மொழிக்கு எள்ளளவும் இல்லை!

சுருங்கச் சொன்னல் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாணவியரும் மாணவரும் தமிழ்—ஆங்கிலம் இரண்டு மொழிப் பயிற்சியிலும் வல்லவர்களாகவே இருக்க வேண்டும்; தனிப்பட்டவர்கள் தத்தம் விருப்பத்திற்கிணங்க வேறு எத்தனை மொழிகளை வேண்டுமானலும் படித்துக்கொள்ளலாம் என்பதுதான் மொழியைப் பொறுத்தவரை கடைபிடிக்கக்கூடிய கொள்கையாகும்."

'இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவையில்லை'

'ஆங்கிலமே ஒருமைப்பாட்டை உருவாக்கும்'

கேரளக் கல்வியமைச்சர் கருத்து

"இந்தியாவின் பலதரப்பட்ட மக்களையும் ஒருமைப்படுத்தவும், அவர்களிடையே ஒருவருக்கொருவர் கலந்துறவாடவும் ஒரு பொது மொழி அவசியம்--தேவை என்று நான் நம்பவில்லை; இந்நிலையில், இந்தியைத் தேசிய மொழியாகத் திணிப்பது நியாயமல்ல என்றே நான் கருதுகிறேன்.

"தற்பொழுது ஆட்சிமொழியாக உள்ள ஆங்கிலத்தை அகற்ற எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை தவறானதாகும்"

என்று கேரளக் கல்வி அமைச்சர் முகமது கோயா, திருவனந்தபுரம் பல்கலைக் கழகம் மற்றும் முன்னாள் தமிழ் மாணவர்களின் சங்கம் ஆகியவைகளைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கருத்தறிவித்தார். அவர் மேலும கூறியதாவது:—

"'தேசிய மொழி' என்று ஒரு குறிப்பிட்ட மொழி இந்தியாவுக்கு அவசியமில்லை; ஆங்கிலத்தையே, பலதரப்பட்ட வட்டாரங்களையும் இணைக்கும் மொழியாக வைத்துக் கொள்ளலாம்; இதற்காக இன்னொரு மொழி அவசியமில்லை.

"மேலும், மூன்ருவதாக ஒரு மொழியைக் கற்பதன் மூலம் மக்களின் சக்தியைப் பாழ்படுத்த வேண்டியதில்லை!

"இதுவரை ஏற்பட்டிருப்பதாக நாம நம்பிகொண்டிருக்கும் இந்தியாவின் ஒற்றுமை, ஆங்கிலத்தால்தான் ஏற்பட்டிருக்கிறது!

"இந்தி பேசாதோர், இந்தி கற்பது நல்லதுதான்; ஆனல், ஏனைய மொழிகளைவிட இந்திக்குத் தனி மதிப்புத் தர வேண்டியதில்லை!

"இந்தி தேசிய மொழியானல், இந்தி பேசாத பகுதியிலுள்ள மக்கள், அதனல் ஏற்படக் கூடிய விளைவுகளை அனுபவிக்க வேண்டிவருவது நிச்சயம்."

ஆங்கில ஒழிப்பு வெறியர்களின் விவேகமற்ற செயல்!

மத்திய கல்வியமைச்சர் சாட்டை

தான்பாத் (பீகார்), நவ. 13—

"'ஆங்கில ஒழிப்பு' இயக்கம் நடத்தும் வெறியர்கள்—குறிப்பாகச் சில இந்தி மாநிலங்களில் பதவியில் இருப்பவர்கள், விவேகமற்ற முறையில் நடந்துகோள்கின்றனர்.

"ஆங்கிலப் பயிற்சியையும், ஆங்கிலம் கற்பிப்பதையும் ஒழிப்பதன் மூலம் அவர்கள் நாட்டை, 17-வது நூற்ருண்டுகட்குப் பின்னேக்கி அழைத்துச் சேல்லுகின்றனர்"

என்று மத்தியக் கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென், இங்கு செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"பாமர மக்களை ஏமாற்றி அறியாமையில் ஆழ்த்திவிட்டுச் சுயநலத்துடன் செயல்படுகின்றவர்கள்தான் 'ஆங்கில ஒழிப்பு'ப் போர்வையில் புகுந்துகொண்டிருக்கின்றனர்" என்ற கருத்தில் பேசிய அவர், அதற்குச் சான்ருகப் பல மேற்கோள்களைக் காட்டிக் கூறியதாவது:—

"வட்டார மொழிகளைப் பாடமொழிகளாக்குவதற்கும், 'ஆங்கிலத்தைக் கைவிட வேண்டும்' என்று சொல்வதற்கும் தொடர்பு ஏதும் கிடையாது.

"இந்தியைத் தீவிரமாக ஆதரிக்கும் ஜனசங்கத் தலைவர்கள் உட்படப் பலர் தங்களுடைய குழந்தைகளை ஆங்கிலம் கற்பிக்கும் புகழ் பெற்ற பள்ளிகளில் சேர்ப்பதற்காக என்னை அணுகியுள்ளனர்; இவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க விசேடப் பள்ளிகளையும், மற்றக் குழந்தைகளுக்குச் சாதாரணப் பள்ளிகளையும் நிர்ணயிக்கிருர்கள்.

"'கான்வெண்ட்' முறையில் நடக்கும் ஆங்கிலம் கற்பிக்கும் பள்ளிகளை மூடுவதற்கு எந்த மாநில அரசுக்கும் சட்டப்படியோ அரசியல் சட்டப்படியோ அதிகாரம் கிடையாது."

சிறையிருக்கும் ஷேக் அப்துல்லாவுக்கு டெலிவிஷன் வசதி!

தொடர்ந்து மாளிகைகளிலேயே பாதுகாப்புக் கைதியாக நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கும் காஷ்மீரத்துத் தலைவர் ஷேக் அப்துல்லா, இப்போது, 'எனக்கு டெலிவிஷன் வசதி தேவை' எனக் கேட்டிருக்கிருராம்!

மத்திய உள்துறை அமைச்சகம், உடனடியாக அவரது கோரிக்கையை ஏற்று, அவருக்கு டெலிவிஷன் பெட்டி ஒன்றை வைத்துத் தரும் எனத் தெரிகிறது.

நாட்டுக் கொடியின் மதிப்பை உயர்த்திடுவோம்!

"பழுதடைந்த சமுதாயத்தைத் திருத்தி—பழுது நீக்கி--சமுதாயம் புத்துயிர் பெறச் செய்திட வேண்டும்!

"நாடு சரியான பாதையில் செல்லும்படியாகவும், நாட்டுக் கொடியின் மதிப்பு உலக அரங்கில் உயர்ந்தோங்கிப் பறந்திடவும் செய்வது இந்த சனநாயக அமைப்பில் அங்கமாக உள்ள நம் ஒவ்வோருவரது கடமையுமாகும்!

"இக்கோடியானது, சகோதரத்துவம்—சமத்துவம்—விடுதலை—முன்னேற்றம்—செழிப்பு ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

"எக்காலத்தும் அந்நிய உதவிகளையே எதிர்நோக்கி நிற்கும் நிலை மாறி, நாம் பிறருக்குத் துணைபுரியும் நிலைமை உருவாக்கிட வேண்டும்."

---அறிஞர் அண்ணா

(அரிமா சங்கக் கூட்டத்தில்)

உலக மகளிர் மாநாடு

போபால், நவ. 13—

உலக மகளிர் மாநாடு நவ. 18-ம் நாள் முதல் 20-ம் நாள்வரை குவாலியர் நகரில் நடைபெறும்.

உலகப் பெண்களிடையே நட்புறவையும், நல்லெண்ணத்தையும் வளர்ப்பதே இம்மாநாட்டின் நோக்கம்.

அத்துடன், உலக அமைதியையும் இம்மாநாடு வலியுறுத்தும்.

கல்கத்தா ஊர்வலத்தில் மாசே-துங் படம்!

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தீவிர அங்கமும், நக்கல்பாரி மற்றும் கிருஷக் சகாயச் சங்கம் போன்ற அமைப்புகளும் சேர்ந்து கல்கத்தாவில் கடந்த சனியன்று நடத்திய ஊர்வலம் ஒன்றில், லெனின், மா சே-துங், நக்கல்பாரி கலகத் தலைவர் சாந்தல் ஆகியோரது படங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன!

இந்த ஊர்வலத்தின் புகைப் படம், 'ஸ்டேட்ஸ்மன்' 12—11—67 இதழில் வெளியாகியுள்ளது.

"வங்காளத்தில் இடைக் காலத் தேர்தல் நடத்தத் தேவையில்லை" என்றும், இந்த ஊர்வலத்தின் முடிவில் 'கல்கத்தா மைதான'த்தில் நடந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சட்டம்--அமைதி பற்றிப் பேசும்

தமிழகக் காங்கிரசின்

மேலான பார்வைக்கு :

தலைநகரில்

கொலை நிகழ்ச்சிகள் மூன்றில் ஒன்று தேடப்படுவதே இல்லை!

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் உள்ள சமுதாய நிலை இது!

அங்கு மூன்று கொலைகள் நடைபெறுகின்றன என்றால், அவற்றில் ஒன்று போலீசாரால் 'தேட'ப்படுவதே இல்லை!

கொலையாளி சுயேச்சையாகப் போகும் அளவுக்குப் போலீசு, நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருக்கிறது!

இத்தகவல் அண்மையில் வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் தரப்பட்டுள்ளது.

1968-ம் ஆண்டுக்கான

அரசு விடுமுறை நாட்கள்

1968-ம் ஆண்டுக்கான அரசினர் விடுமுறை நாட்களை, தமிழக அரசு அறிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக அறிவிக்கப்பட்டுள்ள விடுமுறை நாட்கள் வருமாறு:—

சனவரி 3 : ரம்ஜான்; சன. 15 : பொங்கல்; சன. 26 : குடியரசு நாள்; மார்ச் 11 : பக்ரீத்; மார்ச் 29 : தெலுங்குப் புத்தாண்டு நாள்; ஏப்ரல் 10 : மொகரம்; ஏப்ரல் 12 : பெரிய வெள்ளி; ஏப்ரல் 13: தமிழ்ப் புத்தாண்டு நாள்; சூன் 29 : பாங்கி அரையாண்டுக் கணக்கு முடிவு; ஆகஸ்டு 15 : சுதந்தர நாள்; செப்டம்பர் 30, அக்டோபர் 1 : ஆயுதபூஜை; அக். 2 : காந்தியார் பிறந்த நாள்; அக். 21 : தீபாவளி; டிசம்பர் 21 : ரம்ஜான்; டிச. 25 : கிறிஸ்துமஸ்; டிச. 31 : பாங்கி ஆண்டுக் கணக்கு முடிவு.

சூன் 30-ம் நாள் ஞாயிற்றுக் கிழமையாக இருப்பதால், சூன் 29-ம் நாள் 'பாங்கி அரையாண்டுக் கணக்கு முடிவு'க்கான விடுமுறை நாளாக இருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

சூன் 29-ம் நாள், டிச. 31-ம் நாள் விடுமுறைகள், பாங்கி அலுவல் பார்க்காத கருவூலங்கள் உட்பட மாநில அரசு அலுவலகங்களுக்குக் கிடையாது. இவை தவிர, குறிப்பிட்ட நாட்கள் எல்லாம் அரசாங்க விடுமுறை நாட்களாக இருக்கும்.

அத்துடன், மே இரண்டாவது சனிக்கிழமை தவிர, மற்ற இரண்டாவது சனிக்கிழமைகள் எலலாம விடுமுறை நாட்களாகும்.

தமிழ்ப் புத்தாண்டு நாள் ஏப்ரல் 13-ம் நாள் சனிககிழமை வருகிறது; இது அந்த மாதத்தில் இரணடாவது சனிக்கிழமை யாதலால், அன்று விடுமுறையாகிறது; எனவே, சூன் 10-ம் நாள் திங்கட்கிழமை 'திருவள்ளுவர் நாளு'க்கு விடுமுறையளிக்க அரசு தீர்மானித்துள்ளது. இந்த நாள், தமிழக அரசு அலுவலகங்களுக்கு மட்டுமே விடுமுறை நாளாக இருக்கும்.

'மே நாளை' முன்னிட்டு, மே முதல் நாள் விடுமுறை அளிக்க அரசு தீர்மானிததுள்ளது; ஆனல் அதற்குப் பதிலாக மே 11-ம் நாள் இரண்டாவது சனிக்கிழமை அரசு அலுவலகங்கள் அனைத்துக்கும் வேலை நாளாக இருக்கும்.

மக்கள் அரசு மன்னர்களுக்குத் தரும் மானியம்!

ஒரு சுவையான புள்ளிவிவரம்

இந்தியாவில் உள்ள 279 முன்னாள் மன்னர்கள், மொத்தமாக ரூ. 4.81 கோடியை, இந்திய அரசிடமிருந்து மானியமாக ஆண்டு தோறும் பெற்றுவருகின்றனர்!

1967-68-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத் தொகையான சுமார் ரூ. 3,000 கோடியில், இது 0.15 சதவிகிதமாகும்.

இந்த 279 பேர்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஜாகிர்தார், தாலுக்தார் போன்ற மிகச் சிறிய அந்தஸ்து உள்ளவர்கள்; சில நூறு ரூபாய்களை மட்டும் மானியமாகப் பெறுபவர்கள்; இவர்களில் ஒருவர், ஆண்டொன்றுக்குப் பெறும் மானியம் ரூ. 16 மட்டுமே!

179 மன்னர்கள், ஆண்டொன்றுக்கு ஓர் இலட்சம் ரூபாய் பெறுகின்றனர்!

78 மன்னர்கள், ரூ. 1 இலட்சம் முதல் ரூ. 5 இலட்சம் வரையில் பெறுகின்றனர்!

24 மன்னர்கள், ரூ. 5 இலட்சத்திற்குமேல் மானியம் பெறுகின்றனர்!

கடந்த சில ஆண்டுக் காலத்தில் இந்த 24 பேர்களில் 9 பேர் தாங்களாகவே முன்வந்து, உதவித் தொகையைக் குறைத்துக் கொண்டதன் மூலம் அரசுக்குக் கிடைத்திருக்கும் தொகை ரூ. 81 இலட்சமாகும்.

தங்களது மானியத் தொகையை இந்திய அரசு நிறுத்த உத்தேசித்திருப்பதாக நிலவிவரும் நிலைமையினையொட்டி பம்பாயில் கூடி விவாதித்த முன்னாள் மன்னர்கள், 'நம்பிக்கை மோசம்' என்ற தகவல் புத்தகம் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்; அதில்தான், மேற்கண்ட விவரங்கள் வெளியாகியுள்ளன.

காலத்தோடு முன்னேறுகிறார்கள் முன்னாள் மன்னர்கள்!

அவர்களுக்கும் தொழிற்சங்கம்--போராட்டம்!

பம்பாயில் நடைபெற்று முடிவுற்ற முன்னாள் மன்னர்களின் கூட்டத்தில், தங்களுக்கென நிரந்தர அமைப்பு ஒன்றை வைத்துக் கொள்வதென முடிவுசெய்யப் பட்டிருக்கிறது.

அவர்கள் பெற்றுவரும் மானியத் தொகையை, 'மேலும் நீடிப்பதா வேண்டாமா' என்ற மத்திய அரசின் யோசனையை ஒட்டி, அவர்கள் இப்படிக் கூடிக் கலந்து பேசியிருக்கிறார்கள்!

"எங்களுக்கென இருக்கும் சில சிறப்புச் சலுகைகளைக் காத்துக் கொள்வதென நாங்கள் முடிவு செய்துவிட்டோம்; இதையொட்டி, காலத்தோடு நாங்களும் உடன் செல்ல வேண்டியிருக்கிறது" என்று பத்திரிகைக்காரர்களிடம் பேசிய பரோடா மகாராஜா கூறியுள்ளார்.

"இந்திய அரசியலில் சில வகுப்புகளைச் சார்ந்த மக்கள் பெறும் தனிச் சலுகைகள் கூட முன்னாள் மன்னர்களாகிய எங்களுக்குக் கிடையாதா?" என அவர் கேட்டார்!

"யார் அந்தத் தனிச் சலுகை பெற்ற வகுப்பினர்?" என்று கேட்டபோது, 'பின் தங்கிய—தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மற்றும் ஐ. சி. எஸ். அதிகாரிகள்' என்றார் அவர்!

செய்தியாளர்களிடம் மேலும் பேசிய அவர், மத்திய உள்துறை அமைச்சர் சவாண், 'முன்னாள் மன்னர்கள்பால் மிகவும் அனுதாபம் கொண்டிருக்கிறார்' எனக் கூறினார்.

திருவரங்குளத்தில் சிரமணிப் பணி

4 பர்லாங் சாலை அமைத்தனர்

15—11—67 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கத்தக்குறிச்சி ஊராட்சியிலுள்ள ஆளிடையாபட்டி கிராமத்திற்குச் செல்ல 4 பர்லாங் நீளமுள்ள சாலையை 150 சீரணியினர் ஒரே நாளில் செய்து முடித்தனர்.

சீரணிப் பணித் துவக்க விழாவிற்கு கத்தக்குறிச்சி ஊராட்சி மனறத் தலைவர் அருங்குளவன் தலைமைவகிக்க—ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா பி.ஏ. அவர்கள் சீரணி பணியைத் துவக்கிவைத்தார்கள்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆணையர் பெ. வேலாயுதம், வெண்ணாவக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகம் ஆகியோர் சீரணியின் நோக்கத்தையும் அதன் அவசியத்தையும் பற்றி சிறப்பு சொற்பொழிவாற்றினர்.

இடையிடையே மழைவிடாமல் பெய்தாலும் சீரணியினர் விடா முயற்சியுடன் செயல்பட்டு 4 பர்லாங் நீளமுள்ள சாலையை அமைத்தனர்.

ஆலங்குடித் தொகுதியின் குறைகள்

நேரில் கேட்டறிந்தார் -- கழகச் சட்டமன்ற உறுப்பினர்

திருவரங்குளம் வட்டாரத்தில் 7, 8—11—67-ம் நாட்களில் ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா பி.ஏ., மாங்காடு, கும்மங்குளம், குழந்தை விஞயகர்கோட்டை, பாச்சிக்கோட்டை, கே. ராசியமங்கலம், பாப்பான்விடுதி, வேங்கடக்குளம், தெட்சிணபுரம், மைக்கேல்பட்டி, சம்மட்டிவிடுதி, மூக்கம்பட்டி, மாத்தூர், வடவானம், பெருங்களூர், வாராப்பூர், ஆதனக்கோட்டை, வண்ணாரப்பட்டி, கணபதிபுரம், வளவம்பட்டி ஆகிய கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்தார்.

சட்டமன்ற உறுப்பினருடன் ஆணையர் பெ. வேலாயுதம், வளர்ச்சி அதிகாரிகள் உடன்சென்றனர்.

மக்களின் கோரிக்கையைக் கேட்டு ஆவனசெய்வதாகக் கூறினார்.

"எல்லாக் குளங்களும் நீர் நிரம்பி உள்ளதால் சாகுபடி நல்ல முறையில் அமையும்" என்று மக்கள் கூறினர்.

மின்சார வசதி எல்லாக் கிராமங்களுக்கும் கிடைக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதாக மக்களிடம், சட்டமன்ற உறுப்பினர் கூறினார்.

ரூ.5 இலட்சம் பெறுமானமுள்ள தவளைக் கால்கள்!

நிராகரித்தது பிரான்சு

"சுகாதாரத்துக்குக் கேடு பயப்பது—உணவுக்கு இலாயக்கற்றது" என்ற காரணம் காட்டி, இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட 22 டன் தவளைக் கால்களை பிரான்சு நிராகரித்திருக்கிறது!

ரூ. 5 இலட்சம் பெறுமானமுள்ள இந்த தவளைக் கால்கள் ஏற்றுமதியைத் தொடர்ந்து, இன்னும் பல மடங்கு அளவில் பிரான்சுக்கு அனுப்பப்படுவதாக இருந்ததை, இந்திய அரசு தடை செய்ய இருக்கிறது!

இந்திய தவளைக் கால்களின் தரம் பற்றி இரண்டு மாதங்களுக்கு முன்னரே பெல்ஜியம் புகார் செய்திருக்கிறது!

இரயில்வேயில் இழப்பா?

விசாரணை நடத்தக் கோரிக்கை

இலட்சுமணபுரி, நவ. 13—"நாட்டின் மிகப் பெரிய வணிக நிறுவனமான இரயில்வேயின் நிலைமை குறித்து இரயில்வே அமைச்சர் கவலை தெரிவித்திருக்கிறார்; செலவினங்கள் அதிகரித்து இருக்கின்றன—வருவாய் குறைந்திருக்கிறது; அரசுக்கு இழிபெயரை உண்டாக்கும் இந்நிலையை மாற்றவேண்டும்; அதன் நிர்வாக அமைப்பையும் மாற்றி அமைக்கவேண்டும்.

"இரயில்வேக்கு நஷ்டம் ஏற்படுவதற்கான காரணங்களை அறிய, ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்"

என்று வட மண்டல இரயில்வே அனைத்திந்திய வணிக எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் எஸ். பிரகாஷ் வலியுறுத்தியிருக்கிறார்.

தூற்றப்பட்ட மனிதர்!

ஜான்சன் காட்டும் அனுதாபம்!

"அமெரிக்காவில் அதிக நிந்தனைகளுக்கும் தூற்றல்களுக்கும் ஆளாக்கப்பட்ட மனிதர், தமது பாதுகாப்புச் செயலாளர் 'மாக்நமரா' ஒருவர்தான்!" என்ற எண்ணத்தை, அதிபர் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

"மாக்நமராவின் சேவையையும், முக்கியத்துவத்தையும் நாடு மறக்காது; சரித்திரம் அலட்சியப்படுத்திவிடாது"

என்று ஜான்சன், ஆயுதக் கிடங்கு ஒன்றினைப் பார்வையிடும்போது கூறினர்.

வடக்கு வியட்நாம் கொள்கை பற்றி அமெரிக்க நிர்வாகத்தினைக் குறைகூறும் காங்கிரசின் உறுப்பினர்கள், முதலில் மாக்நமராவைத்தான் மிகவும் தாக்கிப் பேசுவதுதான் வழக்கம்.

அமெரிக்க அதிபர் ஜான்சன் எந்த அளவுக்கு வியட்நாம் கொள்கையில் வெறுப்புக்கு ஆளாகிவருகிறாரோ, அந்த அளவுக்கு மாக்நமராவும் தாக்குதல்களுக்கும், தூற்றல்களுக்கும் பொறுப்பேற்று வருகிறார்!

கரூரில் அமைச்சர் நெடுஞ்செழியன்

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 7—11—67 அன்று கரூருக்கு வருகை தந்தார்; அவரை நகரத் தி. மு. க. துணைச் செயலாளர் டி. கே. சின்னத்தம்பி, நகர்மன்ற உறுப்பினர் இரா. வைரப்பெருமாள், பரமத்தி சண்முகம், கரூர் வர்த்தகக் கழகச் செயலாளர் என். ஆர். எம். பத்மநாபன், மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும், பொதுமக்களும் குழுமியிருந்து வரவேற்றனர்.

8—11—67 காலை 9-மணியளவில் கரூர் நகராட்சி அமைச்சருக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தது.

காலை 9-30 மணிக்கு கரூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற வரவேற்பில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்

காலை 10 மணியளவில் இனம் கரூர் பேரூராட்சியைச் சேர்ந்த திருக்காம்புலியூர் உயர்மட்ட நீர்த் தொட்டியை அமைச்சர் திறந்து வைத்தார்; விழாவிற்கு ஊராட்சித் தலைவர் சே. எஸ். பழனியப்பன் தலைமைதாங்கினார்.

அவ்வூர் பள்ளியில் திருவள்ளுவர் உருவப் படத்தையும் அமைச்சர் திறந்துவைத்து அரிய உரையாற்றினார்.

காலை 10-30 மணியளவில் கரூர் கைத்தறித் தொழிலியல் கூட்டுறவு நெசவாளர் சங்கச் சார்பில் கைத்தறி வார விழா கொண்டாடப்பட்டது; அவ்விழாவிலும் கல்வியமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

விழாவுக்கு சங்கத் தலைவர் மு. குழந்தைவேலு தலைமை தாங்கினார்.

காலை 11-மணியளவில் கரூர் மாஸ்டர் வீவர் சங்கச் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டார்; தோழர் என். ஆர். நல்லசாமி தலைமைதாங்கினார்.

நகர தி. மு. க. செயலாளர் என். ஆர். இராமசாமி, நிலைமையை விளக்கிப் பேசினார்.

அமைச்சர், கோரிக்கைகளுக்குப் பதிலளித்துப் பேசினார்.

பகல் 12-மணியளவில் நெசவாலைச் சொந்தக்காரர் சங்க வரவேற்பில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பிற்பகல் 1-மணியளவில் கரூர் வர்த்தகக் கழகச் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டார்; திரு. ஏ. வி. இராமச்சந்திரன் தலைமைதாங்கினார்; வர்த்தகக் கழகச் செயலாளர் என்.ஆர். எம். பத்மநாபன் அமைச்சரை வரவேற்றுப் பேசினார்.

அமைச்சர், தக்க முறையில் பதிலளித்துப் பேசினார்.

மாலை 3 மணியளவில் கரூர் கலைக் கல்லூரி இலக்கிய மன்றத்தில் கலந்துகொண்டு அரியதோர் இலக்கியச் சொற்பொழிவாற்றினார்.

சென்னை 81-வது வட்ட முத்தமிழ் மன்றம்

சென்னை—வேளாளத் தேனாம்பேட்டை முத்தமிழ் மன்ற நிர்வாகிகள் தேர்தல், மாவட்டப் பிரதிநிதி அ. டேனியல் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:

தலைவர்: கே. எஸ். இராசமாணிக்கம்; செயலாளர்: கே. இராமன்; துணைச் செயலாளர்: ஜே. குமாரசாமி; பொருளாளர்: ஜி. நடராசன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

ஆலந்தூர் கருணாநிதி மன்றம்

ஆலந்தூரில் கலைஞர் கருணாநிதி மன்ற அமைப்புக் கூட்டம் 8—10—67-ல் சைதை வட்டப் பிரதிநிதி இர. கோதண்டராமன் தலைமையில்—மு. க. வெங்கடேசன் முன்னிலையில் நடந்தபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: ந. மோகன்ராஜ்; செயலாளர்: எம். சி. மதனகோபால்; துணைச் செயலாளர்: மு. இராமதாஸ்; பொருளாளர்: மு. செ. நடராசன்; செயற்குழுவினர்: டி. இராசேந்திரன், எம். சி. துரை, பூக்கார சுப்பிரமணியன், இதர் முகமத், எம். கே. மாதவன், வேதகிரி, ஆறுமுகம்.

காங்கிரசாருக்கு அமைச்சர் முத்துசாமி இடித்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யத்துக்குச் சொந்தக்காரர்கள், சாதனையைப் பற்றிப் பேசாமல்—கட்சியின் குறைபாடுகளைப் பேசாமல்—தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினர்—திட்டினர்!

'அரசியலில் மிகப் பெரியவர்கள்' என்று எண்ணத்தக்க சஞ்சீவியார், பிரம்மானந்தர், நிஜலிங்கப்பா, மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்களால் போற்றிப் புகழப்பட்ட அறிஞர் அண்ணாவை நாக்கில் நரம்பில்லாமல் திட்டினர்கள்; 'சட்டமும் அமைதியும் முழுக்க முழுக்கக் கெட்டுவிட்டது; மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்; தேர்தல் முடிவு தி. மு. க.-வுக்கு நல்ல பாடம் கற்பிக்கும்' என்று நீலிக் கண்ணீர் வடித்தார்கள்!

திறமையற்றவர்கள்—மனப்பக்குவ மற்றவர்கள்

'நீங்கள் ஆட்சிக்கு வந்து என்ன சாதித்தீர்கள்?' என்று நம்மைப் பார்த்துக் கேட்டனர்; 'நாங்கள், ஏழை மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்?'

'இந்த நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்தோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்!

ஏழை எளியோர், நடுத்தர மக்கள் பயணம் செய்யும் பஸ் கட்டணத்தைக் குறைத்தோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்!

'ஒரு போகம் விளைந்த நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்து—நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு வழி வகுத்துக் கொடுத்து—உற்பத்தியை அதிகரித்தோம்' என்றோம்; 'ஆ......இது ஒரு சாதனையா' என்றார்கள்!

'புஞ்சை நிலங்களுக்கு நில வரியை ரத்து செய்தோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா?' என்றார்கள்!

'வருவாய் குறைந்திருப்பவர்களின் பிள்ளைகள் பி.யு.சி.-வரை படிக்க வழி வகை செய்தோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்!

'சென்னை நகரையே நாற்றமடிக்க வைத்துக்கொண்டிருக்கும் கூவம் நதியைச் சீர்செய்யத் திட்டமிட்டுச் செயல்படுத்துகிறோம்' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்!

'சென்னை நகரில் 5 இலட்சம் மக்களுக்குத் தேவையான நீர்தான் கிடைக்கிறது; எல்லோருக்கும் நீர் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி, ரூ. 24 கோடி செலவில் வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது' என்றோம்; 'இது ஒரு சாதனையா' என்றார்கள்!

இப்படி, நாம் என்னென்ன செய்துவிட்டுச் சொன்னோமோ அவைகளையெல்லாம் மறுக்கவும் முடியாமல்—பாராட்டவும் முடியாமல் ஏதேதோ பேசினார்கள்!

எது ஒன்றையும் செய்வதற்கான திறமை இல்லாவிட்டாலும் செய்ததைப் பாராட்டும் மனப்பக்குவம்கூட அவர்களுக்கு இல்லையே!

சர்வாதிகாரப் போக்கில் பேசுவதா இவர்கள்?

ஒரு சனநாயக நாட்டில் எதிர்க் கட்சி ஆளுங்கட்சியாகும்; ஆளுங்கட்சி எதிர்க் கட்சியாகும். இந்த மாற்றத்தை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே! 20 ஆண்டுக்காலம் ஆண்டார்கள்—ஓர் ஐந்தாண்டுக் காலம் அண்ணாதான் ஆளட்டுமே!

சனநாயக நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் ஒரு கட்சியைப் பார்த்து, 'ஆறு மாத காலம் அனுமதிப்போம்—ஓராண்டுக் காலம் அனுமதிப்போம்' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இது என்ன சர்வாதிகாரத்தனம்? சனநாயக நாட்டில் தீர்ப்புக் கூற வேண்டியது மக்கள்—அரசியல் வாதிகள் அல்லர்!

ஆண்ட இலட்சணத்தை உலகம் அறியாதா?

சனநாயகத்தில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பவர்களில் காமராசரும் ஒருவர்—என்று நான் நினைக்கிறேன். காமராசரும் இப்படி சனநாயக முறைக்கு மாறாகப் பேசலாமா?

இருபது ஆண்டுக்காலம் இந்த நாட்டை ஆண்டவர்கள், நாம் செய்த — 'சாதாரணமானது' என்று அவர்களால் சொல்லப்படும் சாதனையைக்கூட அவர்கள் செய்ய முடியவில்லை!

இருபது ஆண்டுக்காலம் இவர்கள் ஆண்ட பிறகு, உலகத்திலேயே பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கும் இரு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது! மற்றொன்று இந்தோனேசியா!

படி அரிசித் திட்டத்தில் பொருளாதாரத் தத்துவம்

அறிஞர் அண்ணா அவர்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்ததில் ஒரு பொருளாதாரத் தத்துவமே அடங்கியிருக்கிறது; 'அரிசியின் விலை குறைந்தால் மற்ற இன்றியமையாப் பண்டங்களின் விலையும் குறையும்' என்ற எண்ணத்திலேயே இத்திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்தார்கள்!

இத்திட்டத்தை அனைத்து இந்தியாவிலும், உள்ள அத்துணைக் கட்சித் தலைவர்களும் பாராட்டினார்கள்—அத்தனைப் பத்திரிகைகளும் பாராட்டின!

இப்படி ஒரு திட்டத்தை நிறைவேற்றிவிட்டு, அறிஞர் அண்ணா அவர்கள், மத்திய அரசிடம் உதவி செய்யுமாறு பணம் கேட்டார்கள்; அப்படி பணம் கொடுக்காவிட்டாலும், மத்திய அரசுக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கும் வட்டியையாவது தள்ளிப் போடும்படி கேட்டார்கள். இதற்கு மொரார்ஜி தேசாய் பதில் சொல்லுவதற்கு முன்பே, காமராசர் பதில் சொல்லிவிட்டார்—'கொடுக்க முடியாது' என்று!

நோட்டடித்ததன் பலனை நாடு அனுபவிக்கிறதே!

'விலைவாசியைக் குறைக்க வேண்டும்' என்று நாம் திட்டங்கள் போடும் இதே வேளையில், மொரார்ஜி தேசாய், 90 கோடி ரூபாய்க்கு நோட்டடித்து வெளியிட்டிருக்கிறார்!

'இப்படி நோட்டடித்தால், விலைவாசி குறையாதே' என்று நாம் கூறினால், பொருளாதார மேதை காமராசர், 'நீ பணம் கேட்டால் நோட்டடிக்காமல் என்ன செய்வது' என்கிறார்! அப்படியாவது பணம் கொடுத்தார்களா என்றால், அதுவும் இல்லை!

இப்படி நோட்டடித்து ஒரு ரூபாயின் மதிப்பை 17 காசுக்குக் குறைத்துவிட்டார்கள்!

உலக நாடுகளின் சராசரி வருமானத்தில் இந்தியா 131-வது இடத்தில் இருக்கிறது. இவ்வளவு பொருளாதார முடக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். 'இந்த நாட்டின் பொருளாதாரம் சீர்படவேண்டும்' என்ற எண்ணம் இருந்தால் இப்படிச் செய்வார்களா?

மொழிப் பிரச்சினையில் சட்ட அமைச்சர் மாதவன் பேசியது போல், 20 ஆண்டு காங்கிரசு ஆட்சியில் இருந்த யாராவது ஓர் அமைச்சர் — டில்லியில் உள்ளவர்களிடம் விளக்கிப் பேசியதுண்டா?

இங்கிருக்கும் காங்கிரசுக்காரர்கள், தம்மால் செய்ய முடியாததை நம்மிடம் விட்டுவிட வேண்டும்.

நம்முடைய அந்த எண்ணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ் மக்களின் உணர்ச்சியை ஏன் அவர்கள் மங்கச் செய்ய வேண்டும்?

எதிர்க் கட்சித் தலைவர் செய்வாரா இதனை?

தென் சென்னைத் தேர்தலில் கழகத்திற்கு வாக்குகள் குறைந்து, தோற்றிருந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் திட்டமிட்டிருந்ததாக எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அறிக்கை விட்டிருந்தார். இப்போது தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டதே—ஒரு பாராட்டுத் தீர்மானம் கொண்டுவருவாரா?

'தி.மு.க. தோற்றுவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இருந்தேன்' என்று சொல்லும் கருத்திருமன் இப்போது, தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டதே—குறைந்தது எதிர்க் கட்சித் தலைவர் பதவியையாவது இராஜினாமாச் செய்வாரா?

அப்போது அந்தச் சட்டம் எங்கே போயிற்று?

சொந்தத் தகராறையெல்லாம் எடுத்துக்கூறி, 'நாட்டில், சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டது' என்று காங்கிரசுக்காரர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள்; ஆனால், இவர்கள் ஆட்சியில் தூத்துக்குடி கே.வி.கே. சாமி, கோவை ஆரோக்கியசாமி, நெல்லிக்குப்பம் மஜீத், உடையார்பாளையம் வேலாயுதம், வண்ணைப் பாண்டியன் ஆகியோரெல்லாம் அரசியல் வாதிகளால் கொல்லப்பட்டார்களே — அப்போது சட்டம் ஒழுங்கு எங்கே போயிருந்தது?

'இந்தி வேண்டாம்' என்று சொன்ன மாணவர்களை, பட்டாளத்தைக் கொண்டுவந்து சுட்டுக் கொன்றார்களே—அப்போது சட்டம்-ஒழுங்கு காக்கப்பட்டதா?

இந்தச் சலசலப்புக்கு நாங்கள் அஞ்சமாட்டோம்

தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பு ஏற்ற மறுகணமே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதா? இந்தச் சலசலப்புக்கெல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம்!"

வெளிவிவகார இலாகா கேள்விக் குறியாகவே இருக்கிறது!

ஓரிரு நாட்களில் மேலும் சில அமைச்சர்கள்

நேற்று புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் நான்கு துணையமைச்சர்களைத் தொடர்ந்து, தலைமையமைச்சர் இந்திரா, மேலும் சிலரைச் சேர்த்துக்கொள்ளக் கூடுமெனவும் புதுடில்லிச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஆந்திரத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஆர். கிருஷ்ணா துணை அமைச்சராகப் பதவி பெறுவது உறுதி எனத் தெரிகிறது.

'காபினட்' தகுதி பெற்றிருந்தபோதிலும், இதுவரையில் இலாகாப் பொறுப்பு இல்லாமலே இருந்துவரும் சத்திய நாராயண் சின்கா, சுகாதார—வீட்டு வசதி இலாகாக்களைப் பெறுவார் என நம்பப்படுகிறது.

சாக்ளா வெளியேறியதிலிருந்து வெளிவிவகார இலாகாவினைத் தலைமையமைச்சரே கவனித்துவருகிறார்.

புதிய நியமனங்கள் செய்யப்பட்டிருக்கும் இப்போதுகூட, அந்த இலாகாவுக்கு வேறு எவரும் தேர்ந்தெடுக்கப்படாதது, பார்வையாளர்களுக்கு வியப்பினைத் தந்திருக்கிறது!

"வெளிவிவகார இலாகாப் பொறுப்பு, அமைச்சர்களில் முக்கியமான ஒருவருக்குத் தருவது, மற்றையோருக்குக் கசப்பினைத் கொடுக்கும்; எனவே, அதற்காகப் புதிதாக ஒருவரை நியமிப்பதும், கட்சித் தலைவர் தேர்தல் வரை எதிர்பார்த்து முடிவு செய்யவேண்டிய ஒன்றாகும்" என்ற மனப்போக்கில் இந்திரா இருப்பதால், இந்தப் பெரிய மாற்றம் இப்போதைக்கு இல்லை என்று கூறப்படுகிறது.

தென் சென்னை இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற

முரசொலி மாறனுக்கு

பாராட்டு -- பொதுக்கூட்டம்

15--11--67 மாலை 6 மணிக்கு

சென்னை -- திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர் : நிலநாராயணன்

பாராட்டுரை : **அறிஞர் அண்ணா**

மற்றும் பலர்

—சென்னை மாவட்ட தி.மு.க.

மருத்துவமனையில் நடிப்பிசைப் புலவர்...

நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டுள்ளார்

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், நெஞ்சுவலி காரணமாக வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

எட்டாண்டுகளுக்குமுன் கார் விபத்து ஒன்றின்போது அவருக்கு நெஞ்சில் அடிபட்டது; இப்போது அதனால் கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டிருக்கிறது.

மருத்துவமனையில் கோ. விசுவநாதன் எம்.பி., வேலூர் வட்ட தி.மு.க. செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் ஆகியோர் சென்று பார்த்து உடல்நிலை பற்றி விசாரித்தனர்.

அமைச்சர்

மு. கருணாநிதி உடல்நிலை

பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களுக்கு இன்றிரவு 10 மணியளவில் கண் வலி ஏற்பட்டது; குடும்ப டாக்டர் உடனே வந்து ஊசி ஒன்று போட்ட பின் சிறிது நேரத்திற்கெல்லாம் வலி அதிகமாகி அவர் மயக்கமடையவே, டாக்டர் இராமமூர்த்தி, டாக்டர் ஆபிரகாமும் விரைந்து வந்து சிகிச்சை செய்தனர்; பின்னர், மெதுவாக மூர்ச்சை தெளிந்தார்.

அதற்குள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், செய்தியறிந்து விரைந்து வந்தார்; அப்போது கருணாநிதி மெல்லிய குரலில் பேசத் தொடங்கவே, அண்ணா அவர்கள்; கருணாநிதியிடமும், டாக்டர்களிடமும் நிலைமையைக் கேட்டறிந்தார்கள்.

'பைல்'களைப் படித்துப் பார்ப்பதைவிட, படிக்கச் சொல்லி கேட்கவேண்டும் எனவும், இன்னும் ஒரு மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கருணாநிதியிடம் அண்ணா கூறினார்; டாக்டர்களும் அதே கருத்தை வலியுறுத்தினர்.

ஆகவே அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு முழு ஓய்வு தேவைப்படுவதால், கழகத் தோழர்களும், நண்பர்களும் பார்வையாளராகச் சென்று தொந்தரவு தராமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெல்ல ஏற்றுமதிக்குத் தடையில்லை!

தமிழக அரசு விளக்கம்

கோவை, நவ. 13—"வெல்லம், நாட்டுச் சர்க்கரையைக் (கண்டசாரி) வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை" என்று தமிழக அரசு விளக்கம் கொடுத்திருக்கிறது.

தமிழகத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும் இதற்குப் பெர்மிட் கொடுக்கப்படும்.

ஏற்றுமதிக்கான மனுக்களை சிவில் சப்ளை கமிஷனருக்கு அனுப்பும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மற்ற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குள் வெல்லம், நாட்டுச் சர்க்கரை கொண்டுவருவதற்கும் தடையில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible]) [illegible]